உ

ஸ்ரீ வாணிசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப்பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை க.] 1913-ம் ஆ ஜனவரி மீ [இதழ் க.

இலௌகிகப் பகுதி.

கலைமகள் துதி.

மண்கண்ட வெண்குடை கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே.

நலம் எதுபெற விரும்பினும் விரும்பியாங்கு நிறைந்த அன்பொடு ஒருமுறை பாராயணஞ்செய்த அம் மாத்திரையானே எய்துவிக்கும் இக்காரிகை, மகிமை மாநகர்ச் செந்திலில் மன்னும் எந்தை முருகவேள் திருவருள் விசேடத்தானே ஐந்தாம் அகவையின் மூங்கை நீக்கப்பெற்ற முதுக்குறைவாளர் குமரகுருபரனார், [illegible]பர் [illegible]ஆணையாறே அவிமுக்தம் அடைந்து தருமமியற்றற்குத் த[illegible]தோரிடம் பெறுவான் அவ்வூ ராசாள் [illegible]ல்லி பாஷாவொடு அளவளாவ விரும்பி அவரறிந்த இந்துஸ்தான பாஷையைத் தெரித்தருளவேண்டுமென்று சகலகலாவல்லியை ஒன்பது

பாடல்கொடு வழுத்தியும் திருவருள் செயாததால் திருவருள் சுரந்திடத் திருவாய் மலர்ந்தருளியது. இதனைத் திருவாய் மலர்ந்தருளிய துணையானே கலைமகளருள் கவினுறுத்திற்று.

மலர்தலை யுலகில் பெறுதற்கரிய பிறவியைப் பெற்ற மாநுடர் இப்பிறவி அறியதற்கரிய அவதியை யுடையதென அறிந்த தருணந் தாமடைதற்குரிய பொருள் என்னை யென வினுவுவர். அறம், பொருள், இன்பம், வீடெனத் துணிவர். இந்நான்கையும் ஒருசேரப் பெறுவார் கலைமகளருள் பெற்றோரே. வனையர் பெறுரென்பது ஒருதலை. ஈ தறம் என உணர்ந்த பின்னரன்றோ அதனைப் பெற முயற்சித்தல் இயல்பு. அவ் வுணர்ச்சி சுத்த வுணர்ச்சியாக இருத்தல் வேண்டுமன்றோ. அது கலைமகளருள் ஒன்றானே சித்திக்கும் இயல்பது. சுகம் பயக்கும் எது கொண்டு பொருளைப் பலருந் தேடுகின்றனர். எப்பொருள் சுகம் பயக்கும்? நல்வழி ஈட்டிய பொருளே இம்மை மறுமை ஈரிடத்தும் சுகம் பயக்கும். நல்வழியோ கலைமக ளருளால் விளங்குங் கவினது. சுத்தம், அசுத்தம், மிசிரம் எனு மூவகை இன்பங்களுள் சுத்த போகத்தையே விவேகிகள் விரும்புவர். ஈது சுத்த போகமென வுணர்ந் தடைவதற்கும் கலைமக ளருளே வேண்டும். வீடும் ஞானங்கொண்டு நணுகும் நற்பதம் அன்றோ. அபரம் பரமெனும் இருவகை ஞானங்களுள் அபர ஞான மெய்திய பின்னரன்றோ பர ஞானம் எய்தும் பான்மைத்து. அபர ஞானம் கலைமகளருளன்றோ. நால்வகைப் பொருளும் நவையறத் துய்ப்பான் கலைமகள் அருளே நிலையுறல் வேண்டும். படைப்போன் முதலாம் பண்ணவர் பல்கோடியுறினும் என் பயன்? விளம்பில் கலைமகளே கண்கண்ட தெய்வம். அவ் வம்மை அருளில்லையேல் பேசுவதெங்கே பெறுவதெங்கே துய்ப்பதெங்கே? எச்சிறு நலம்பெற விரும்பினும் எப்பெரு நலம்பெற விழைபினும் கலைமக ளருளுண்டேல் கைகூடும். இல்லையேல் இல்லை.

கு[illegible]குருபரர்க்குக் குவலயம் ஆளுங் கோ[illegible] அளவளாவித் தாம் கருதிய தருமாபி விருத்தியை முடித்து இன்னுங் கண்கூடாக அத கரு[illegible]ம் விளங்குமாறு செய்த திரு[illegible]ருள் இச்

செய்யுட் பலனன்றோ. இச் செய்யுள் மண் முழுதும் தம் குடை நிழற்ற மேம்பாடுற்ற மன்னரையும் தம் வழியொழுகச் செய்தது குமாரகுருபரமூர்த்திகளுக்கு.

ஆதலின் இத் துதியை முன் பெற்று வரும் இக் கலைமகளும் வேண்டும்நலங்களை விரும்பி அன்பு செய்வார்க்கு அருள்வள் என்பது நிச்சயம்.

அன்பி னருமை அறிந்து அடைந்தெக்கழுத்தமுறும் செல்வர்களே! இக் கலைமகளை ஆதரிமின். போற்றுங்கள். வேண்டுவன பெறுமின். இன்புறுமின். சுபம்.

ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்துச் சுவாமிகள்.

கலைமகள் கழகம்.

ஐயன்மீர்!

கலைமகள் கழகம் என்னும் பெயரிய சபையானது, புதுவை வேளாளர் வீதி 4-ம் நெ. கிருகத்தில் தாபிக்கப்பெற்று ஒரு வருடம் ஒன்பது மாதங்களாகின்றன. இது 1911-ம் ஆடு டிசம்பர் மீ 29-ம்வ கூடிய மாட்சிமைதங்கிய கவர்னர் துரையவர்கள் தனி யாலோசனைச் சங்கத்தில் அங்கீகாரம் செய்யப்பெற்றுள்ளது.

கலைக் கடலாக விளங்கும் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முகமெய்ஞ்ஞானசிவாசாரிய சுவாமிகள் கௌரவ அக்கிராசனபதியாக அமர்ந்தருளும் பெரும்பேற்றையும் இக்கழகம் பெற்றுள்ளதென்க.

இக் கழகமானது இலக்கிய இலக்கண நூல்கள் ஆராயப்பெறும் கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் முதலிய விஷயங்கள் உபந்நியாசம் பெற்றும் விளங்குவது அறிஞர் பலரும் அறிந்ததே.

இங்ஙனம் கல்வியாகிய கணவனை மணந்து கருக்கொண்ட கலைமகள் கழகமென்னும் இக் காரிகையினிடத்து, இச் சுதினத்

தில், 'கலைமகள்' என்னும் ஓர் பசுங் குழவி பிறந்தது பலர்க்கும் களிப்பை விளைக்குமென்று கருதுகின்றேம்.

பத்துத் திங்கள் கழிந்து சனிக்கும் மற்றைச் சாமானிய சிசுக்கள்போலாது, ஆன்றோ ரநுக்கிரக விசேடத்தான் ஒரு வருட மொன்பது மதி கருவிருந் துயிர்த்த மகவாதலின், இது உதித்தவுடனே அரிய பெரிய விடயங்களென்னும் அணிபல புனைந்து பல அறிஞர் கரத்துஞ் சென்று பரிந்து விளையாடி உவகைப் பேரமிழ்தூட்டாநிற்கும். இனிப் பிரதி மாதமும் தமிழின் மாட்டு அபிமானமுடைய அறிஞர் பலரும் இக் கலைமகளைத் தமது கரத்தி லேந்திக் களிப்புறுவ ரென்பதிற் சிறிது மையமின்று.

கலைமகளென்னும் இப் பைங்குழவி செழித்து வளர்வதற்குச் செவிலித்தாயர்கள் வேண்டுமன்றோ. சந்தா நேயர்களே அச் செவிலித்தாய ராவரென்க. ஆதலின், அறிஞர் யாவரும் சந்தா நேயர்களாகி இக் கலைமகளைக் கவினுற வளர்த்து ஆதரிப்பது அவர்கட்கு இன்றியமையாக் கடமையா யிருக்குமென நம்புகின்றோம். நிற்க,

கலைமகள் பத்திரிகையைப் பிரசுரிக்கும்படி ஆஞ்ஞை செய்து அதற்கு விஷயதானம் செய்து வருவதாக வாக்களித்தருளிய ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்துச் சுவாமிகளையும், திருக்களர் ஆண்டவரென்னும் ஸ்ரீ வீரசேகர ஞானதேசிகர் பாதசேகர ரான கோயிலூர் ஸ்ரீமத் சுப்பைய சுவாமிகளையும் மனமொழி மெய்களால் வழிபடுகின்றோம்.

இப் பத்திரிகை பிரசுரிக்கும் விஷயத்தில் அடிக்கடி யெம்மை உற்சாகப்படுத்தியும் அது விஷயமாகப் ப்லவிதத்திலு முதவி புரிந்தும் வருகின்ற எமது ஆப்த நண்பர் புதுவைக் கல்வே காலேஜ் ஹெட்மாஸ்டர் கனந் தங்கிய தம்பி புருஷோத்தமப் பிள்ளையவர்கள் அன்புடைமை என்றும் மறக்கற்பாலதன்று.

எமது வேண்டுகோளின்படி, சிரமங் கருதா[illegible] இக் கலைமகள் பத்திரிகைக்கு விஷயதானம் புரிய முன்வந்த புதுவைக் கலோனியல் காலேஜ் ப்ரொபஸர் ப்ரம்மஸ்ரீ சுவாமிநாத தீக்ஷித

முதலிய அறிஞர் சிகாமணிகட்கு யாம் வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இப் பத்திரிகையைத் தாங்கள் பெறுவதுமன்றித் தங்கள் நண்பர்களையும் இதி லீடுபடுத்தி, அன்புகூர்ந்து எமக்குக் கடித மனுப்பிய வெளியூர் நண்பர்கட்கும், இக் கலைமகளை யாதரிக்க அன்போ டெழுந்தவர்களும் எழுகின்றவர்களுமாகிய உள்ளூர்ச் சந்தா நேயர்கட்கும் பெரிதும் நன்றி செலுத்துகின்றோம்.

கலைமகள் கழகமும் அதிற் றோன்றிய இக் கலைமகள் பத்திரிகையும் சிறிதும் தளர்ச்சியுறாது என்றும் நின்று நிலவுமாறு, முன்னைப் பழம்பொருட்கும் பழம்பொருளாய முழுமுதற் கடவுளை எஞ்ஞான்றும் இறைஞ்சுகின்றோம். சுபம்.

பத்திராதிபர்.

சரீரப் பயிற்சி.

பொதுவாய் மனிதர் கற்கும் கல்வியைச் சரீரப் பயிற்சி, மனப் பயிற்சி என இரண்டு வகையாய்ப் பிரிக்கலாம். இவைகளில் முதலாவதாய சரீரப் பயிற்சி நமது தேசத்தின் க்ஷேமத்திற்கும் ஒவ்வொருவர் சுய நன்மைக்கும் இன்றியமையாததாகும். ஆனால் நமது நாட்டிலோ தங்கள் குழந்தைகளின் கல்வியைக் கவனிக்கும் பெற்றோர் சிலரேயாவர். ஏனையோர் பிள்ளைகளைப் பெறுவது தங்கள் வேலை யென்றும் அவர்களுக்குக் கல்வி கற்பித்துச் சீர்படுத்துவது உபாத்தியாயர்கள் கடமை யென்றும் நினைத்தார் போலும். தங்கள் பிள்ளைகளின் அபிவிருத்தியைக் கவனிப்பவர்களுங் கூட அவர்கள் பாடங்களைச் சரிவரப்படித்துப் பரீக்ஷைகளில் தேறுவதற்கு வேண்டிய முயற்சியைச் செய்கிறார்களேயன்றிச் சரீரப் பயிற்சியைக் கவனிப்பதேயில்லை யென்று சொல்லலாம். இதற்கு யாது காரணமென்று சற்று விசாரிப்போம்.

அந்நிய தேசத்தவர்கள் நம்மைப் பற்றிப் பேசும்போது "மைல்ட் ஹிந்து சாதுவான ஹிந்து என்று பல முறையும் சொல்லக் கேட்டிருக்கிறோம். இங்குச் சாது என்பதற்குத் தர்ம சாஸ்திரப் பிரகாரம் நடப்பவனென்பது பொருளல்ல. யார் என்ன தீங்கு செய்த போதிலும் பொறுத்

துக்கொண்டு பதில் தீங்கு செய்யச் சக்தியற்றுக் கிடப்பவ னென்பதே பொருளாகும். இவ்வசைச் சொல் இந்தியர்களுக்குத் தகுமா? முற்றிலும் தகாது. ஏனெனில் நமது தேசத்திலும் மற்றத் தேசங்களி லிருப்பதுபோலவே சண்டை சச்சரவு வீரத்தன்மை முதலியவைகளுக்கு, என்றும் குறைவில்லை. ஆகிலும் இங்கு ஒன்று கவனிக்கத்தக்கது. நமது நாட்டார் ஐரோப்பியர் அமெரிக்கர் முதலியவர்களைப்போல ஐஹிக சுகங்களையே விசேஷமாய் நாடாது ஆமுஷ்மிக சுகங்களிலேயே பெரிதும் கண்ணுள்ளவர்களா யிருந்தார்கள். அச் சுகம்பெற அவரவர் தங்கள் ஜாதி தர்மங்களை அநுசரித்து நடந்து ஞானமடைய முயன்றார்கள். அக்காலத்தில் குலாசாரங்களை வழுவாது கைக்கொண்டால் நம் முன்னோர்கள் ஏற்பாட்டின்படி சரீரப் பயிற்சியும் மனப் பயிற்சியும் ஒருங்கே ஸித்திக்க இடமிருந்தது. இப்பொழுதோ காலஸ்திதிகளின் வேறுபாட்டினால் வருணாச்சிரம தர்மங்கள் நிலைகுலைந்து கிடக்கின்றன. இந்த நிலைமையில் நாம் என்னசெய்யவேண்டும்? " சரீர மாத்யம்கலு தர்ம ஸாதனம் " என்ற ஆன்றோர் மொழிக்கேற்ப எல்லா நன்மையும் கைகூட முதலில் நமக்கு நல்ல தேகம் வேண்டும். நாம் ஒவ்வொருவரும் பலமும் நோயின்மையும் வாய்ந்த ஒருடலைப் பெற்றால்தான் மற்றப் புருஷார்த்தங்கள் கைகூடும். அத்தகைய தேகத்தை எப்படிப் பெறலாம்? சரீரப் பயிற்சியினாலன்றோ?

இப்பொழுது இங்கிலாந்து ஜர்மனி முதலிய தேசங்களில் தேகப் பயிற்சியை எவ்வளவு கவனிக்கிறார்க ளென்பதை நாம் அறியோமா? இங்கிலாந்தில் ஒரு கல்விச்சாலையில் பாஷை கணக்கு சரித்திரம் பூகோளம் முதலிய பாடங்களில் எந்தப் பையன் வகுப்பில் முதல் என்று கேட்டால் பிள்ளைகளுக்கு அவ்வளவாய்த் தெரியாது. ஆனால் யார் கிரிக்கெட் அடிப்பதில் முதல், யார் காலால் எற்றிப் பந்தடிப்பதில் தலைவன், யார் படகு விடுவதில் கைதேர்ந்தவன் என்று கேட்டால் எல்லாருக்குந்தெரியும். அவனுக்கே அங்குக் கௌரவ மதிகம். அவனே மற்றப் பிள்ளைகளால் கொண்டாடப்படுந் தெய்வமென்று சொல்லலாம்.

அங்கு அப்படியிருக்க, நமது தேசத்திலோ அநேகம் பிள்ளைகள் விளையாடுவதே யில்லை. பள்ளிக்கூடத்தில் நடக்கும் ஜிம்னாஸ்டிக்ஸ் விஷயமாய் எத்தனை தகப்பன்மார் " ஐயா, நம்ம பையன் ரொம்ப பயந்தவன். ஜிம்னாஸ்டிக்ஸ் செய்தால் ஒருக்கால் கீழே விழுந்து கை கால்களை முறித்துக்கொள்ளக்கூடும் எங்களுக்கு ஒரே செல்வக் குழந்தையாகையால் தயவுசெய்து அவனை மன்னிக்கவேணும். அவசியமானால் எங்கள் பையன் மற்றவர்கள் செய்வதைப் பார்த்துக்கொண்டிருக்கட்டும்" என்று

தலைமை உபாத்தியாயரிடத்தில் சொல்லியிருக்கிறார்கள்! இப்படியே ஒவ்வொரு தகப்பனும் இருந்தால் கொஞ்ச நாளில் நாம் எல்லோரும் பரம ஸாதுக்களாகவே ஆய்விடுவோம்.

இப்பொழுது நமது பள்ளிக்கூடங்களில் சிறுவர்களின் தேகப் பயிற்சிக்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன? ஆரம்ப பாடசாலைகளில் கவாத்துப் பழகுதல் ஜிம்னாஸ்டிக்ஸ் இவைகளும் உயர்தரக் கலாசாலைகளில் இவைகளோடு கொஞ்சம் விஜாதீய நூதன விளையாட்டுகளாகிய பலவகைப் பந்தாட்டங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கவாத்துப் பழகுவது படையாட்களுக்குச் செய்விக்கும் அப்பியாசங்களைப் போன்றிருப்பதால் அதைப்பற்றி இங்கு விஸ்தரிக்கவேண்டுவதில்லை. ஆனால் ஜிம்னாஸ்டிக்ஸைப் பற்றிக் கொஞ்சம் பிரஸ்தாபிக்கவேண்டியிருக்கிறது. இப்பொழுது நமது பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் செய்வதற்கு ஜிம்னாஸ்டிக்ஸ் என்னும் பெயர் தகுமா? அச்சொல் கிரேக்கு பாஷையினின்று வந்தது. அது நிர்வாணமாய்ப் பயிலும் தேகப் பயிற்சி என்று பொருள்படும். அதாவது நமது அவயவங்கள் ஒவ்வொன்றும் அப்பயிற்சியின் நன்மையைப் பெறவேண்டுமானால் அவைகள் தங்கு தடையின்றித் தாராளமாய் அசைய இடமிருக்கவேண்டுமென்பது தெளிவாகும். ஆகவே அக்காலத்தில் அதிக ஆடை கூடாது என்றது செவ்வனே புலப்படும். ஆனால் நமது வித்தியார்த்திகளோ பொதுவாய்ப் பள்ளிக்கூடத்தில் வகுப்பில் படிக்கும்போதிருந்த அலங்காரத்தோடுதானே ஜிம்னாஸ்டிக்ஸ் செய்கிறார்கள். உடம்பின்மேல் உள் சட்டை, அரைச் சட்டை, வெளிச் சட்டைகளோடு காலில் மேற்சோடும் சப்பாத்துமாய்த் தலையில் குல்லாய் முதலியவைகளோடு இவர்கள் விளையாட்டுக் கூடத்தில் நட்டிருக்கும் கருவிகளின்மேற் கையூன்றி அங்குமிங்கும் பார்த்து அசைய, ஏனையோர் இவர் அறியாமையைப் பார்த்துச் சிரிக்க, உபாத்தியாயர் இந்தப் பாடம் எப்பொழுது முடியும் என்று சலித்து அடிக்கடி மணி கேட்டுக்கொண்டு அண்டையில் நிற்க, குந்தியிருக்கும் செல்வப் பிள்ளைகள் கதை பேசிக் களிக்க, பார்ப்போர் நகைக்க இச்சிறுவர்கள் செய்யும் ஆட்டிற்கும் அந்தக் கௌரவமான பேர் தகுமோ? தகாது, தகாது. இந்தப் பயிற்சியும் ஒவ்வொரு பையனும் வாரத்திற்கு இரண்டு மூன்று நிமிஷங்களுக்குமேல் செய்ய இடமில்லை. இதனால் அவர்களுக்கு என்னபயன் உண்டாகும்? மேலும் நமது ஜிம்னாஸ்டிக்ஸ் உபாத்தியாயர்களுக்குப் பொதுவாய் இப்பொழுது இருக்கும் யோக்கியதை போதாது. அவர்கள் சில அப்பியாசங்களைச் செய்து பிள்ளைகளைத் தங்களைப்போல் செய்யப் பழக்குகிறார்களேயன்றி வேறல்ல. அவர்கள் ஒவ்வொருவரும் கொஞ்சம் சாரீரக

சாஸ்திர உணர்ச்சி யுள்ளவர்களாயும் பிள்ளைகளால் செய்யப்படும் ஒவ்வொரு அப்பியாசத்திற்குங் காரணந் தெரிந்தவர்களாயும் அது பிள்ளைகளுக்கு என்ன நன்மை பயக்கும் என்று நன்றாய் அறிந்தவர்களாயு மிருத்தல் வேண்டும்.

(பின்னும் வரும்.)

சுவாமிநாத தீக்ஷிதர்.

பயம்.

" அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில். "

(திருக்குறள்)

உலகத்தின்கண் மானிட சென்ம மெடுத்த ஒவ்வொருவரும் கடவுளொருவருக்கே பயப்படல் வேண்டும். பாவம் ஒன்றிற்கே அஞ்சுதல் வேண்டும்.

நிற்க,

" இடுக்கண்வந் துற்ற காலை யெரிகின்ற விளக்குப் போல
நடுக்கமொன் றானு மின்றி நகுகதா னக்க போழ்தவ்
விடுக்கணை யரியு மெஃகா மிருந்தழு தியாவ ருய்ந்தார்
வடுப்படுத் தென்னை யாண்மை வருபவந் துறுங்க ளன்றே. "

(சீவகசிந்தாமணி)

எத் துன்பம் நமக்கு வந்துற்ற போதிலும் தென்றல் முன்னின்ற சிறிய சுடர்போல மன நடுக்கமுறாமல் அத் துன்பத்தை யலக்ஷியஞ் செய்து நகைத்தல்வேண்டும். அங்ஙனம் நகைத்தலே அதனை யரியும் வாளாம். நகாதிருந்து அழுது பிழைத்தார் ஒருவருமில்லை. வீணில் நமது மனோதைரியத்தைக் கொல்வதாலாய பயனென்னை? வருவனவாய தீங்கும் நன்கும் வந்தே தீரும்.

எனத் திருத்தக்க தேவரும் கரும்புங் கைக்கு மொழிகளால் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றனர்.

இவ்வுறுதிகளை மறந்தவர்களாய் நம்மவர்கள் தாயகட்டினின்று காட்டகத்திற்குச் செல்லும் வரையில் பாழும் பயமென்னும் பெருநோய்கட் கிரையாகித் தம் வாழ்நாட்களைத் துன்பத்திற் கழிக்கின்றார்கள்.

குழந்தைப் பருவத்தி லிருந்தே இந்தப் பயமென்னும் விஷத்தைப் பாலோடு நமக்குப் புகட்டுகின்றார்கள். சோறுண்ணத் தாமதித்தால் பேய் வரும் பிசாசு வருமென்றும் பூச்சிக்காரன் பிடிப்பான் அஞ்சுக்கண்ணன் கடிப்பான் என்றும் பலவாறு பயமுறுத்தி நம் நெஞ்சக்கட்டவிழ்த்து நம்மை யிளம் பிராயந் தொட்டே மன வெழுச்சி யற்றவர்களாகச் செய்துவிடுகின்றார்கள்.

கல்வி கற்கப் புகுங் காலையிலோ கல்வியின் மெய்ச் சுவைகளை மெல்ல மெல்ல நமக்கு உணர்த்தி நம்மை வசப்படுத்திப் போதிக்க வறியாத ஆசிரியர்கள் நம்மை அடித்தும் மிரட்டியும் படிப்பில் வெறுப்பையும் மனதில் பயத்தையுமே வளர்க்கின்றனர்.

தக்க வயது வந்தபின்னரும் அச்சமெனு மாயப்பேய் நமது மனதில் குடிகொண்டு நம்மைப் பலவாற்றானும் இம்சிக்கின்றது.

மந்திரமறைகட் கெட்டாப் பரப்பிரமம் ஒன்றுண்டென்பதையும் பழிக் கஞ்சி உண்மையான ஒழுக்க நெறியில் வழுவாது நின்றவர்க்கு அதுவே அபயமென்பதையும் அதுவன்றி யனுவு மசையாதென்பதையும் மறந்தவர்களாய் நம் மனோவிகாரத்தினால் கற்பனைசெய்துகொண்டதும் பேயாட்டிப் பூசாரிகள் தங்கள் சீவனார்த்தமாகச் சிருஷ்டித்துவைத்திருப்பதுமான கற்பனா தெய்வங்களின்மீது நீங்காத பயப் பிராந்தி கொண்டவர்களாய் நமது ஆயுள்காலமுற்றும் கழிக்கின்றோம்.

“அண்ணாமலையா ரருளிருந்தால் மன்னார்சாமி மற்றென்செய்யும்” என்னும் சாமான்ய உண்மையை முதலாக உற்றுணரும் சக்தியற்றவர்களாய் வீண் அச்சமென்னும் அகப்பேய்கொண்டு அலைகின்றோம்.

இலௌகிக வியாபாரங்களினும் அங்ஙனமே. நாமெது செய்யப் புகினும் அச்சமே முன்னின்று நம்மைப் பாதிக்கின்றது.

“ ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும் ”

என்னும் தெய்வவாக்கின் உண்மையை உன்னாது நாம் எதிற் பிரவர்த்திக்கத் தொடங்கினும் கேடு வருமென்ற அச்சமே நெஞ்சிற் கொண்டவர்களாய்ச் சோதிடம், ஆரூடம், சகுனம், நிமித்தம் இவைகளில் சதா கவலை கொண்டவர்களாய் நம்மனதை இடைவிடாது அச்சமெனுங் கயிற்றி லூசலாடவைக்கின்றோம்.

(இன்னும் வரும்.)

தம்பி புருஷோத்தமன்.

பால சிக்ஷை.

க-வது அத்தியாயம்.

யானைமுதல் எறும்பீருக வுள்ள சகல சீவ செந்துக்களும் தத்தங் குழவிகளை வளர்க்கும் விதிகளை இயல்பாகவே அறிந்திருக்கின்றன.

இவ்வறிவு அவைகட்கு இயல்பாக இருக்கின்றன வென்பதற்கு, ஒவ்வொரு ஜந்துவும் உலகாரம்பமுதல் எவ்விதமாய்த் தத்தங் குழவிகளை வளர்த்தனவோ அவ்விதமாகவே இற்றைக்கும் ஒருவித மாறுதலுமின்றி வளர்த்துவருவதே போதிய சான்ருகும்.

அதற்கு மாருக, மானிடர்கள் தம் குழந்தைகளை வளர்க்கு முறையில் கால தேசத்திற்கு ஏற்ப, நானுவித வேறுபாடுகள் உண்டா யிருக்கின்றன.

சில மிலேச்ச ஜாதியார் குழந்தை பிறந்தவுடன் குளிர்ந்த ஜலத்தில் மூழ்கவைத்து எடுக்கின்ருர்கள். வேறு சிலர் இரண்டு பலகைகளைச் சிரசில் இறுகக் கட்டிப் பிறந்தபோதுள்ள சுயரூபத்தை நீள வைத்து மாற்றுகின்ருர்கள். மற்றுஞ் சிலர் பிறந்தவுடன் சிசுக்களைத் துணியினுற் சுற்றி மரக் கிளைகளில் தொங்கவிடுகின்ருர்கள். இன்னுஞ் சிலர் பாலர்கள் ஜனித்தவுடன் அக்கினிக்கு அருகில் வைத்து உலாவைக்கின்றனர். நம்மவரினும் பலர் சிசு உதித்தவுடன் இரும்பு ஊசிகளைப் பழுக்கக் காய்ச்சி வரி வரியாகச் சுடுவிட்டுச் சிறுநீரைப் பருகச் செய்கின்றனர். இன்னும் சிலர் சிசுக்களின் காதினருகில் பித்தளைப் பாத்திரத்தை வைத்து அதிக சத்தம் உண்டாகும்படி கொம்பினுல் தட்டுகின்ருர்கள்.

பெற்ருேர்க்கு இயல்பாகத் தங்கள் பிள்ளைகள் மீது இருக்கின்ற அன்பினுல் தங்கள் அறிவு விளக்கமாகாமல் இக் கொரோச் செயல்களைச் செய்கின்றனர்.

பிறந்தவுடனே இத்தகைய வித்தியாசமான செய்கைகள் ஏற்படுமாயின், பிறகு பிள்ளைகளின் வளர்பருவத்தில் உண்டாகுங் கோட்பாடுகள் எண்ணிறந்தன வென்பது ஆச்சரியமன்று.

அவர்கள் வளர்பருவத்தில் அறிவின் விருத்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் அநுசரிக்கவேண்டிய முறைகளைப் பெற்ருேர் சற்றும் கவனியாமலிருப்பது தகுதியா?

இவற்றைச் செய்தால் நன்மை, இவற்றைச் செய்தால் தீமை என்பது முதலாக யோசித்து நிர்ணயிப்பதில்லை. ஆகார வஸ்துக்களில் சிலவற்றை மாத்திரம் உபயோகிக்கவேண்டுமா அல்லது பலவற்றையுங் கொடுத்துச் சீரணக் கருவிகள் அவற்றைச் சீரணிக்கச் செய்யும் சக்தியை விருத்திசெய்ய அப்பியசித்து வரவேண்டுமா? குழந்தைகள் தாங்களாக ஓடியாடி வளர்வது நலமா அல்லது அவ்விதமின்றி வாளாவிருக்க வளர்க்கப்படுவது நலமா? காற்று, மழை, வெய்யில், குளிர் இவைகளால் ஏற்படும் சிரமங்களை அநுசரித்துப் பழகிவருவது குணமா? அல்லது அச் சிரமங்கள் அணுகவிடாமல் பாதுகாத்துவருவது குணமா? பசுங்குழவி வாய் குவித்து அழக் கண்டால் யாதாமொரு அசௌகரியத்தால்தானே அழுகிறதென்று உடனே ஓடியெடுத்து அழுகையை நிறுத்தல்வேண்டுமா? அல்லது குழந்தைகட்குக் கரைதல் இயல்பென்றும் உடனுக்குடன் அழுகையைப் பரிகரிப்பதனால் சொற்ப காரணத்திற்கெல்லாம் அல்லது அகாரணமாகவே குழந்தை அழப்பழகிவிடுமென்று சற்றுக்கவனியாதது போல இருப்பது உத்தமமா?

இத்தகைய சாதாரண வினாக்களுக்கு முதலாக நிராக்ஷேபமான விடைகள் இன்னுங் கிடைப்பது அரிதெனில், நுண்ணறிவையும் நல்லொழுக்கத்தையும் பாலர்கட்குப் புகட்டும் சரியான முறைகள் எங்ஙனம் சுலபத்திற் கைகூடும்?

பாலர்களை நன்கு வளர்த்தல் குடும்ப விருத்திக்கும் தேசக்ஷேமத்திற்கும் இன்றியமையாததாதலினாலும் அது விசேஷமாய்ப் பெற்ற தாயையே பொருந்திய முக்கிய கடமையானதினாலும், பாலர்களை வளர்க்கும் விஷயமாய்ச் சுருதி யுக்தி யநுபவங்களா லேற்பட்டுள்ள சிற்சில முறைகளை யான் கூறப்புகின், அவற்றிலுள்ள குற்றங் குறைகளை க்ஷமித்துக் குணத்தை மாத்திரம் பாராட்டி, நமது இந்து சகோதரிகள் அவற்றை அன்புடன் அங்கீகரிப்பார்களென்னும் உறுதியினால், பின்வரும் விஷயங்களை யெழுதத் துணிகின்றேன்.

உ-வது அத்தியாயம்.

குழந்தை ஜனனம்.

முதல் வயது.

இப் பருவத்தின் சிக்ஷை.

மிருகங்களில் பலவற்றிற்கு ஜனித்தக்ஷணமே அறிவு, இந்திரியவுணர்ச்சி, தேகசக்தி முதலியவை பூர்த்தியாக ஏற்பட்டுள்ளன.

கோழிக் குஞ்சு குடம்பையினின்று வெளிப்பட்டவுடனே ஓடி நிலத்தை அலகினாலும் நகத்தினாலும் கிண்டிக் கிளறி மணலில் மறைந்து கிடக்கும் தானியத்தைப் பொறுக்கித் தின்கிறது. பனி மலைகளில் வசிக்கும் மான்களில் பூரண சினையாயுள்ள பெண்மான் வேடர்களாற் றுரத்தப்படும்போது, சற்று நின்று கன்றீன்று அதனை நாவினால் நீவ, உடனே அப் பச்சைப் பசுங்கன்றும் தாயுடன் மேடு பள்ளங்களைத் தாண்டியோடி, வேடன் அஸ்திரத்திற்குத் தப்பிப் பிழைத்துப்போகும் சக்தி யுடைத்தாயிருக்கின்றது.

இதற்கு மாறாக, நம்முடைய குழந்தை முற்றும் பலவீன ஸ்திதியிலிருக்கின்றது. உலகில் உதிக்கும்போதே, பிறவி துன்பமென்பதற்குச் சான்றாக, குளிரால் மெலிந்து அழுதுகொண்டே வெளிவரும். ஆகாயம் (காற்று) சுவாசக் குழைகளைக் கிழித்துக்கொண்டு கஷ்டத்துடன் உட்புகும். கண்கள் திரையினால் மூடப்பட்டவைபோல ஒளியற்றுப் பிரகாசத்துக்கு அஞ்சிக் கூசுந்தன்மை யுடைத்தா யிருக்கும். செவிப் புலனும் அற்றிருக்கும். குக்ஷிபாதையுணர்வு ஒன்று மாத்திரம் உடையதாகத் தோன்றி, எது தரினும் எதுகிட்டினும் தன் கனிவாய் திறந்து சும்பிக்கப் புகும். கட்புலனும், செவிப்புலனும் பிறந்த ஒருவாரத்துக்குப் பிறகே உண்டாகும். எனெனின், விளக்கைப்பார்த்து அதன் பின் கண்கள் செல்லவும் திடீரெனச் சத்தத்தைக் கேட்டு நடுங்கவும் எழெட்டு நாட்கள் செல்லும். பூரண கர ஸ்பரிச வுணர்ச்சி ஐந்தாறு மாதங்கட்கு முன் சரி வர இராது. குழந்தைக்கு ஒரு பொருளைக் காட்டினால் முதல் மாதங்களில் வாய் குவித்து அதனை வாயினாற் பிடிக்க முயலும். சில மாதங்கள் சென்ற பின்னரே கையினால் தாவிப் பிடிக்கப் புகும். தூரம், சமீபம் என்கிற அறிவு பல மாதங்களுக்குப் பின் அநுபவத்தினாலேயே ஏற்படும்

இத்தகைய கேவல ஸ்திதியிலிருக்கும் குழந்தையின் அறிவை விருத்தி செய்வதற்கும் தேகாரோக்கியத்தைப் பாதுகாத்துச் சரீர பலத்தை அதிகப் படுத்துவதற்கும் அநுசரிக்கவேண்டிய முறைகளைப் போதிப்பது பால சிக்ஷையாகும்.

இந்த அத்தியாயத்தில் அறிவை விளக்கி அபிவிருத்தி செய்யும் முறைகளைச் சற்றுக் கவனிப்போம்.

(பின் வரும்.)

த. பு. அம்மணியம்மாள்.

இலக்கியப் பகுதி.

மயிலச் சிலேடை வெண்பா

மூலமும் உரையும்.

நான்முகம்.

விநாயகர் முதலியோர் துதி.

பாவார் மயிலவெண் பாவையுமென் னோயினையுங்
காவா முடிக்குமெனக் கண்ணியே — நாவார
வாழ்த்தியா னந்த மலையானை மாணடியைத்
தாழ்த்தி யணிந்தேன் றலை.

(இதனது பதப் பொருள்.) பாவார் - அழகு பொருந்திய, மயில வெண்பாவையும் - மயிலச் சிலேடை வெண்பாவையும், காவா - காத்து, முடிக்கும் என - முற்றுவிக்கும் என்றும், என் நோயினையும் - அடியேனுடைய வியாதியையும் காவா - காக்காமல், முடிக்கும் என - அழித்து நாயேனை யிரக்ஷிக்கும் என்றும், கண்ணி வ - கருதியே, நா ஆர - நா நிறைய, வாழ்த்தி - துதித்து, யான் - நான், அந்த மலை - அந்த மயில மலையில் எழுந்தருளியிருக்கும், யானை - யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளினது, மாண் அடியை - மாட்சிமை பொருந்திய திருவடியை, தலை - சிரசை, தாழ்த்தி - கீழ்ப்படுத்தி, அணிந்தேன் - அணிந்துகொண்டேன், எ - று. என்று விநாயக வணக்கமாகவும்;

பாவார் மயிலம் என்பதற்குப் பரப்பும் நீளமும் பொருந்திய மயில மலையின்மேற்கூறிய என்று பொருள் செய்யினும் பொருந்தும். காவா என்னும் செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம், உண்ணுகிடந்தன என்பது, உண்டுகிடந்தன எனப் பொருளாமாறுபோல, மயிலச் சிலேடை வெண்பாவைக்காத்து என உடன்பாடாகவும், உண்ணாது எனப் பொள்படும் துவ்வீறுகுறைந்த எதிர்மறை யாதல்போல, என்னோயினைக் காவாமல் என எதிர்மறைப்பொருளாகவும் வருதல் அறிக. யானை - ஆகுபெயர். நான், தோன்றாவெழுவாய். அணிந்தேன், பயனிலை. அடியை, செயப்படுபொருள்.

2-ம் உரை.

யான் - நான், அந்த மலையான் - அந்த மயில மலைக்குரியவராகிய முருகக் கடவுளினது, ஐ - அழகிய, மாண் - மாட்சிமையுடைய, அடியை - திருவடியை, தாழ்த்தி யணிந்தேன்றலை, என்று ஸ்ரீ முருகக் கடவுள் வணக்கமாகவும்;

3-ம் உரை.

ஆன் - இடப வாகனத்தையுடைய, ஐ - பரமசிவத்தினது, ஆனந்தம் - நிருத்தானந்தத்தை யனுபவிக்கும், அமலை - உமா தேவியாரது மாணடியைத் தாழ்த்தி யணிந்தேன்றலை என்று உமா தேவியார் வணக்கமாகவும்;

ஆனந்த மலையானை என்பதை, ஆனை ஆனந்த மலை என மாற்றிப் பொருள் கூறப்பட்டது. ஆனந்தவமலை எனற்பாலது, ஆனந்த மலை என அகரம், தொகுத்தல் விகாரம் பெற்றது.

4-ம் உரை.

யான் - நான், அந்தம் - ஞான வழகை, மலை - அணிந்திருக்கும், ஆன் ஐ - நந்திதேவருடைய, மாணடியைத் தாழ்த்தி யணிந்தேன்றலை என்று திரு நந்திதேவர் வணக்கமாகவும்;

5-ம் உரை.

யான் - நான், நந்து - சங்கினையும், அம் - மேக நிறத்தையும், அலையான் - திருப்பாற்கடலையு முடையவராகிய விஷ்ணு மூர்த்தியினது, ஐ - அழகிய, மாணடியைத் தாழ்த்தி யணிந்தேன்றலை என்று விஷ்ணு மூர்த்தி வணக்கமாகவும்;

6-ம் உரை.

ஆன் - இடப வாகனத்தையும், நந்து - ஆக்கத்தைத் தரும், அலையான் - உமா தேவியாரையும் உடைய சிவபெருமானது, ஐ - அழகிய, மாணடியைத் தாழ்த்தி யணிந்தேன்றலை என்று ஆயினும்,

ஆனந்தம் - பேரின்பத்தைக் கொடுக்கும், மலை - வெள்ளியங்கிரியையும், ஆன் - இடப வாகனத்தையும் உடைய, ஐ - சிவபெருமானது, மாணடியைத் தாழ்த்தி யணிந்தேன்றலை என்றுயினும், பொருள் செய்து சிவ வணக்கமாகவும், கொள்ளக்கிடந்தமை யுணர்க.

இன்னும் ஆனந்தம் அலையான் எனப் பிரித்து ஆனந்தங் கெடாதவனென்றும், ஆனந்த சாகரத்தை யுடையவன் என்றும், பொருள் கூறினும் பொருந்தும்.

பாவார் மயில வெண்பாவையு மென் ஞேயியீனயுங் காவா முடிக்கு மெனக் கண்ணியே நாவார வாழ்த்தி யான் விநாயகக் கடவுள், முருகக் கடவுள், உமா தேவியார், நந்திதேவர், விஷ்ணு மூர்த்தி, சிவபெருமானுர் ஆகிய இவர்கள் திருவடிகளைத் தாழ்த்தி யணிந்தேன்றலை என்று தனித் தனிக் கூட்டி முடித்துக்கொள்க. இம்மட்டும் விரிவஞ்சி விடுத்தாம்.

(இன்னும் வரும்.)

பு. அ. பெரியசாமிப் பிள்ளை.

மணிமேகலை.

இது தமிழிலுள்ள பழைய காப்பிய மைந்தனு ளொன்று. (மற்றையவை: சிந்தாமணி, சிலப்பதிகாரம், குண்டலகேசி, வளையாபதி என்பன.) சிலப்பதிகார நூலாசிரியராகிய இளங்கோவடிகள் கேட்ப, கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவராய மதுரைக் கூலவாணிகன் சாத்தனுர் என்னும் புலவர் பெருமானுல் இந்நூல் இயற்றியருளப்பட்டது. சிலப்பதிகாரக் கதைத் தலைவனுன கோவலனது காதற் பரத்தையாகிய மாதவி பெற்ற மணிமேகலை யென்பாளது துறவு முதலிய சரித்திரத்தை விரித்துக் கூறுதலின், இது மணிமேகலை யெனப் பெயர் பெற்றது. ஆதலின் இந்நூல் சிலப்பதிகாரத்தோடு கதைத்தொடர்புடையதென்க.

முதலிற் கதைபொதிபாட்டையுடைத்தாய் விழாவறைகாதை முதற் பவத்திறமறுகெனப்பாவைநோற்றகாதை யிறுதியாகவுள்ள முப்பது காதைகளையுடையது. ஒவ்வொரு காதையும் ஒவ்வொரு பெரிய ஆசிரியப் பாவா லமைக்கப் பெற்றது. சொற்சுவை பொருட்சுவை முதிர்ந்து தெள்ளிய நடையிற் சிறந்து விளங்குவது. இளம்பூரணர், நச்சினுர்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்குநல்லார் முதலிய உரையாசிரியர்களால் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பிரமாண நூல்களுள் ஒன்று.

இக்காலத்தில் வேறுருவாற்றுனும் விளங்காதனவாகிய சில தெய்வங்களுடைய பெயர்களையும், அத் தெய்வங்களை வழிபடு முறைமையையும், சில சாதியாரையும், அவர்கள் நடை முதலியவற்றையும், சில நகரங்கள் தீவுகள் மலைகள் வனங்கள் சோட்டங்கள் அறச்சாலைகள் மன்றங்கள் முதலியவற்றையும், அவைகள் இன்ன இன்ன வண்ணமாக

இருந்தன வென்பதையும், இன்ன இன்ன சமயங்கள் இன்ன இன்ன விடத்திற் பரவியிருந்தன வென்பதையும், அவற்றி னிலக்கணங்களையும், சில அரசர் சில முனிவர் முதலியோருடைய சரித்திரங்களையும், பிறவற்றையும் இந்நூலில் விளங்க அறிந்துகொள்ளலாம். மணிமேகலை பௌத்த சமயக்கொள்கையைத் தழுவி யொழுகியவளாதலின் அக்கொள்கையையே இந்நூல் சிறப்பித்துக்கூறும்.

இதன் அருமை பெருமைகளை யுளங்கொண்டே "மாதவி பெற்ற மணிமேகலை நம்மை வாழ்விப்பதே" என மகா கவியாகிய கம்பர் புதல்வர் அம்பிகாபதியும், "கொந்தார் குழன் மணிமேகலை நூனுட்பங் கொள்வதெங்ஙன்" எனத் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும் தாங்களியற்றிய கோவைகளிற் சிலேடையி லமைத்து விளக்கினரெனின், இந்நூலின் பெருமையை யாம் கூறுவதெங்ஙன்?

இறந்தன போக இறக்குந் தறுவாயிலிருந்த அரிய பெரிய பழைய நூல்கள் பல செழித்து விளங்கிப் பலர்க்கும் பயன்படுமாறு, அரிதின் முயன்று அச்சிற் பதிப்பித்துத் தமிழ் நாட்டிற்குப் பேருதவி புரிந்தவரும் புரிகின்றவரும் பூத வுடம்போடு புகழுடம்பும் பெற்றவருமாகிய மகா மகோபாத்யாயர் உத்தமதானபுரம் ப்ரம்மஸ்ரீ வே. சாமிநாதைய ரவர்கள் இம் மணிமேகலைக்கு அரும்பதவுரை யருளிச்செய்திருக்கின்றார்கள்.

இத்தகைய அருமையும் பெருமையும் வாய்ந்த இம் மணிமேகலை இப்பத்திரிகை வாயிலாக வெளிவரின், தமிழ் மக்கள் பலர்க்கும் பெரியதோர் நன்மை பயக்குமென்பதிற் சிறிதும் ஐயமின்று. ஆனால் நூலினது பெருமையையும், பத்திரிகையினது சிறுமையையும், காலத்தினீட்சியையும் கருதுமிடத்து, ஆதியோடந்தமாகப் பத்திரிகையில் வெளிவருவது அசாத்தியமென்றே தோற்றுகிறது. ஆதலின் அந்நூலிற் சுவை முதிர்ந்தொழுகும் காதைகளிற் சிற்சில பொறுக்கி, காலத்திற்கும் பத்திரிகை தரு மிடத்திற்கும் தக்கவாறு, அத னரும்பத வுரையி னுதவியைக் கொண்டு, இப் பத்திரிகையிற் சிறிது சிறிதாகப் பொழிப்புரையோடு பிரசுரித்துக்கொண்டு வரலாமென நினைத்துக் காதை யாரம்பத்தை அடுத்த பத்திரிகைக்கு விடுத்தனமென்க.

பத்திராதிபர்.

திற்குமித்தையான அனுத்மாவைத் தூலதிருஷ்டியுடையோர்க்கு அதிஷ்டானமாகக் கூறியிருக்கின்றது என்பதாம். எனினும் இச் சமாதானமும் பொருந்தாது. ஏனெனின், எங்ஙனம் சர்ப்பாத்தியாசத்திற்கு விசார திருஷ்டியால் இரஜ்ஜு உபகித சேதனத்தை அதிஷ்டானமாகக் கூறப்பட்டிருக்கின்றதோ அங்ஙனம் இங்கு ஆத்மாத்தியாசத்திற்கு விசார திருஷ்டியால் அனுத்மாவை யன்றி வேறு அதிஷ்டானம் யாது? விசார திருஷ்டியால் அனுத்ம உபகித சேதனமே அதிஷ்டானமெனின், அது பொருந்தாது. ஏனெனில், அனுத்ம உபகித சேதனமோ ஆத்மாவாம். அவ்வாத்மாவையே அதன் (ஆத்மாவின்) அத்தியாசத்திற்கு அதிஷ்டானமாகக் கூறினல் ஆத்மாசிரயதோஷம் ஸ்பஷ்டமாகவே பிராப்தமாகும். ஆகலின் இச் சங்கைக்குச் சற்று விரிவான சமாதானங் கொடுத்து தெளிவிக்குமாறு வேதாந்த வித்வன்மணிகளாயிலகும் பெரியார் சந்நிதியில் விண்ணப்பித்துக்கொள்ளுகின்றேன்.

ஆ. செங்கல்வராய முதலியார்

காஞ்சிபுரம்.

சுஜன சம்வாதம்.

ஒரு நல்ல கப்பல்.

ஒரு நாள் சாத்தன், கொற்றன் என்னும் இரண்டு சிநேகிதர்கள் கடற் பாலத்தில் உல்லாசமாக உலாவிக்கொண் டிருக்கையில் சாத்தன் என்பவன் எதையோ ஒன்றைப்பற்றிச் சிந்தித்து ஆச்சரியப்பட்டுக்கொண் டிருப்பதை அவனது முகக் குறியால் கொற்றன் தெரிந்து சாத்தனைப் பார்த்துச் சொல்கின்றான்.

கொற்றன். அன்பனே என்ன! எதையோ உனக்குள்ளேயே சிந்தித்துக்கொண்டு ஆச்சரியப்படுகின்றனே?

சாத்தன். ஐயா, இதோ நம் எதிரில் கடலில் மிதந்து வரும் கப்பலைப் பார்த்ததில் இதன் அமைப்பையும், உபயோகத்தையும் சிந்தித்து ஆச்சரியப்படுகின்றேன்.

கொற்றன். அன்ப, ஈதொரு ஆச்சரியமா என்ன?

சாத்தன். ஐயா, நீர் சொல்வதைப் பார்த்தால் இதனைப் பார்க்கிலும் ஆச்சரியமானதுவேறொன்றுண்டுபோல் தோன்றுகின்றதே!

கொற்றன். ஆம் உண்டு.

சாத்தன். ஆயின் அஃதெது தயைசெய்து சொல்லும்.

கொற்றன். அன்ப, நீயொரு கப்பலிலிருந்துகொண் டிருக்கின்றாயே அதைப் பார். பார்ப்பையானல் அதன் அமைப்புக்கும்,

உபயோகத்துக்கும் இக் கப்பல் நிகராகாமலிருப்பதை நீயே யறிவாய்.

சாத்தன். ஐயா, நீர் சொல்லும் வார்த்தைதான் எல்லாவற்றினும் ஆச்சரியமாயிருக்கின்றது. ஏனெனில், நான் இப்போது கடற் பாலத்தி லிருக்கின்றேன். நீரும் கடல் பாலத்தில்தானிருக்கின்றீர். அங்ஙன மிருக்க, நானொரு கப்பலி லிருப்பதாய்ச் சொல்கின்றீர். இதென்ன நீர் கனவு காண்கின்றீரோ. இல்லை இல்லை. உமது கண்கள் திறந்தபடி யிருக்கின்றன. இன்னும் உலாவிக்கொண்டு மிருக்கின்றீர். ஆகையால் உமக் கிப்போது ஏதோ சித்தப் பிரம முண்டாயிருக்கவேண்டும்.

கோற்றன். அன்பனே, அவசரப்படாதே. எதையும் நன்றாய் விசாரித்துப் பார்க்கவேண்டுமன்றோ?

சாத்தன். ஐயா, நீர் சொல்வதொன்றும் எனக்குத் தோன்றவில்லை. எவ்வளவுதான் ஆராய்ந்து பார்த்தாலும் நானும் நீரும் இக் கடற் பாலத்தில்தா னிருக்கின்றோம் என்றே எனக்குத் தோன்றுகின்றது. நான் விழித்துக்கொண்டுதானே யிருக்கின்றேன்.

கோற்றன். அன்ப, உன் விழிப்பும் உணர்வும் பிராந்தியா லாகியதாம்.

சாத்தன். ஐயனே, தாங்க ளென்ன சொல்கின்றீர்களோ அதனைத் தாங்களே தயைசெய்து தெரிவித்தாலன்றி நானே தெரிந்து கொள்வதற்கு ஆற்றலுடையவனா யிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஆகலின் எப்படித் தெளிவிக்கவேண்டுமோ அப்படித் தெளிவிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

கோற்றன். அன்ப, நீ உன் சொரூப மின்னதென்பதை முதலில் தெரிந்துகொண்டால் பின் நீ இருக்கும் இடம் இன்னதென்று நன்கு புலப்படும்.

சாத்தன். ஐயனே, தாங்கள் சொல்வதொவ்வொன்றும் ஆச்சரியத்தின்மேல் ஆச்சரியமா யிருக்கின்றது. முன் நான் ஒரு கப்பலி லிருப்பதாய்ச் சொன்னீர்கள். இப்போது என் சொரூபத்தை நான் அறியாதிருப்பதுபோலப் பேசுகின்றீர்கள். இது வியப்பின் வியப்பு!! தம் சொரூபத்தை யறியாதாரும் உலகி லொருவருளரோ!!!

(இன்னும் வரும்.)

ஆ. செங்கல்வராய முதலியார்

காஞ்சீபுரம்.

சமாசாரம்.

குணாநந்தா சுவாமிகள்.

மார்கழி மீ 2-ம் உ மாயவரம் சுவாமி குணாநந்தா அவர்கள், கோலார் உரிகம் தங்க வயலில் விஜயம் செய்து தாயைப்பற்றி உபந்நியாசம் செய்து வந்தனர். அச்சமயம் ஷெடி ஊரில் வியாபாரம் செய்யும் சாமிநாதனுடைய சகோதரனுக்கு பிளேக் கண்டு துன்புற்றிருந்தவர் ஷெடி சுவாமிகளிடம் வந்தனர். சுவாமிகள் அவர்களுக்குக் குங்குமப் பிரசாதம் தரலும், அதைச் சுமார் இரண்டங்குல பருமனுள்ள கட்டியின்மேல் பூசின மாத்திரத்தில், 24 மணி கோரத்துக்குள் அந்நோய் இருப்பிடம் தெரியா தொழிந்ததாம். "செயற்கரிய செய்வர் பெரியோர்".

வேண்டுகோள்.

இக் கலைமகள் பத்திரிகையைப் பெறுதற்குத் தக்கவரென்று நினைத்துச் சில கனவான்கட்கு முதற் சஞ்சிகையை அனுப்பியுள்ளோம். அவர்களும் அதனை யன்போடேற்று அதற்குரிய ஒரு வருஷச் சந்தாவை அனுப்புவார்களென்று பெரிதும் நம்புகின்றோம்.

பத்திரிகைவேண்டாதவர்கள் தயைகூர்ந்து உடனே தெரிவித்துவிடில் எமக்கு நஷ்டமுண்டுபண்ணாதவர்களாகக் கருதப்படுவார்கள்.

விஷயதானம் செய்ய விரும்புவோர் ஒரே பக்கத்தில் திருத்தமாகச் செந்தமிழ் நடையில் புதிதாக ஏற்பட்டுள்ள பத்திரிகை விதியை யனுசரித்து எழுதியனுப்ப வேண்டுகின்றோம். மறுக்கப்பட்ட விஷயங்கள் திருப்பி யனுப்பப்படமாட்டா.

இராஜதந்திரம் மததூஷணம் முதலிய விஷயங்களையும் நிந்தைக்குரிய மற்றெந்த விஷயங்களையும் நமது கலைமகள் தனதங்கத்திலணியச் சிறிதும் விரும்பாள்.

நமது கலைமகளை யனுப்பப் பெறும் மற்றப் பத்திராதிபர்களும் மாற்றுப் பத்திரிகையாகத் தத்தம் பத்திரிகையை எமக்கனுப்பி அன்பு பாராட்டுமாறு பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
சி. பங்காரு
பத்திராதிபன், புதுவை.

அறிவிப்பு.

கலைமகள்.

'கலைமகள்' என்னும் பெயரிய இப் பத்திரிகை கல்வி, அறிவு, ஒழுக்கம், இலக்கியம், இலக்கணம், தர்க்கம், பக்தி, ஞானம் முதலிய இன்றியமையாத பல விஷயங்கள் தக்கவர்களா லெழுதப் பெற்று மாதந்தோறும் வெளிவரும்.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளும், வேதாந்த பாஸ்கரர் கோயிலூர் ஸ்ரீமத் வீர – சுப்பைய சுவாமிகளும் இதற்கு விஷயதானம் செய்துவருவதாக வாக்களித்தருளியுள்ளார்கள்.

இது அதிக பொருட் செலவிற் பிரசுரிக்கப்படினும், தமிழ் வளர்ச்சி கருதி, மிகக் குறைந்த விலைக்கு அமைக்கப்பெற்றுள்ளது. இதனைப் பெற விரும்புவோர் பத்திராதிபருக் கெழுதி வி. பி. தபால்மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். முற்பண மனுப்புவோர்க்கே பத்திரிகை யனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

		ரூ. அ. ப.
ஒரு பக்கத்திற்கு மாதம் ஒன்றுக்கு	...	2 – 0 – 0
அரைப் பக்கத்திற்கு ,,	...	1 – 0 – 0
கால் பக்கத்திற்கு ,,	...	0 – 6 – 0

பத்திராதிபர்.